தியாகராய கல்லூரி விடுதியில் மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்

***210 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சென்னை தியாகராய கல்லூரி விடுதி மாணவர்களுள் சிலர் மஞ்சள் காமாலை ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்களா ?

(இ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் அவ்வாறு பாதிக்கப் பட்டனர்?

(உ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சுமார் 16 விடுதி மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

(உ) நடவடிக்கை தேவை என்று இது விஷயம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

Bridge across Thambiravarani near Srivaikuntam Railway Station

***211 Q.—Thiru T. MARTIN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is proposed to broaden the existing bridge over the Thambiravarani near Srivaikuntam Railway Station in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஸ்ரீ வைகுண்டம் ரயில் நிலையத்திற்கருகில் தாமிரவருணியாற்றின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை அகலமாக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். இப்பொழுது அந்தப் பாலத்தில் போக்கு வரத்து அதிகமாக ஆகியிருக்கிறபடியால், ஒரு இடத்தில் ஒரு பஸ் வருகிறபொழுது, எதிர்த்தாற் போல் இன்னொரு வண்டி வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இனிமேலாவது அந்தப் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் பற்றி இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதனை அகலப்படுத்துவதற்கு ரூபாய் 5 லட்சம் வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 18 அடி அகலம் தான் இந்த சாலை இருக்கிறது. இருக்க வேண்டிய அகலம் 24 அடிக்குக் குறைவாக இருந்தாலும், தற்பொழுது நடைபெறுகிற போக்குவரத்திற்கு அது இடைஞ்சலாக இல்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சாலைகள்

*** 212 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டம், செய்யூரிலிருந்து பனையூர் செல்லுகின்ற சாலை மழைக்காலங்களில் பெருஞ் சேதம் அடைவதால் நிரந்தரமான நிலையில் அதை அமைக்கின்ற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

[968 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம் செய்யூரிலிருந்து பனையூர் செல்லும் சாலையை தேவையான குறுக்கு வடிகால் அமைப்புகளுடன் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை விரைவில் முடிக்கும்படி, சென்னை நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை மேற்பார்வைப் பொறியாளருக்கு நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சாதாரண மழை காலத்தில்கூட பாதை அடைபட்டுப் போகிறது. ஆகவே, உடனடியாக இதைச் செயல் படுத்த அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னுடைய பதிலிலேயே அதை விரைவில் முடிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

* 213 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையையும், கொட்டாம்பட்டியிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையையும் 100 அடி அகலமாக்குவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

*214. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the expenditure incurred during the last three years by the Government in maintaining the city roads taken over from the Madras Coporation ;

(*b*) the details of the roads so taken for maintenance ; and

(*c*) whether the Government propose to hand over the maintenance work back to the Madras Corporation ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ), and (இ) : மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர a அறிக்கையைப் பார்க்குமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(உ) இல்லை, அத்தகைய செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. விநாயகம் : சார், கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ரோடுகளை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுக்க வேண்டும் என்று ஒரு விதியின் அடிப்படையில், சென்னைக்கு வருகிற ரோடுகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள செயற்குறிப்பு ஏதாவது உண்டா ? குறிப்பாக கோடம்பாக்கம் ஆற்காடு ரோடில் அதிகமான வண்டிகள் சென்று, அதிக போக்குவரத்து இருப்பதால், அதை விசாலப்படுத்துவதற்கும், வேறு வழிகள் செய்வதற்கும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே அரசாங்கம் எடுத்திருக்கும் சாலைகளை மாநகராட்சி திரும்பக் கேட்கிறார்கள். பொதுவாக அப்படிப்பட்ட செய்ற்குறிப்பு எதுவும் இல்லை.

---

a 757–758-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.